முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

61—

அணை

*1640—**திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சி, பெரியபாலேகுழி அருகில் அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சியில் அணை கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை திட்ட உருவாக்கத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட, பேவநத்தம் ஊராட்சியில், பெரியபாலேகுழி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்காக, 1992 ஆம் ஆண்டு துறையின் சார்பாக ஆய்வு செய்து, திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, கடந்த 19 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. கடந்த 2009-2010 ஆம் ஆண்டு 175 இலட்சம் ரூபாய்க்கு திருத்திய மதிப்பீடு செய்யப்பட்டு கடந்தகால ஆட்சியாளர்கள் நிலுவையில்*

2011 ஆகஸ்ட் 25]

வைத்துவிட்டார்கள். ஆகவே, இந்த ஆண்டு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சியில் பெரியபாலேகுழி அருகில் அணை கட்டும் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு 2010-2011 ஆம் ஆண்டின் விலை விகிதப்படி 190 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டப் பயன் செலவு விகிதம் 0.79:1 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 19.4 ஏக்கர் பட்டா நிலமும், 38.2 ஏக்கர் புறம்போக்கு நிலமும் மற்றும் 2.1 ஏக்கர் வனத் துறைக்குச் சொந்தமான நிலமும் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி, தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை திட்ட உருவாக்கம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது. மதிப்பீட்டுடன்கூடிய கருத்துரு பெறப்பட்டு, நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்று சொன்னார்கள். எனவே, இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திட்டமிடப்பட்ட அந்த அணை கட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 19 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள அந்தத் திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[2011 ஆகஸ்ட் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி அவர்கள்.

திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனது செய்யூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சிக் காலத்தில் வாயலூர் அருகில், பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. அந்தத் திட்டத்தை, இப்பொழுது செயல்படுத்த அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குறிப்பிடுகின்றபொழுது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட திட்டம் என்று குறிப்பிடுவதால், உடனடியாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சித்திரைத் திருவிழாவையொட்டி, கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும்பொழுது, அவ்வப்போது பல இலட்சம் ரூபாயில் பாலம் அமைக்கப்படுகிறது. எனவே, ஆழ்வார்புரத்தில் நிரந்தரமாகப் பாலம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், இதற்கான பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

புதிய கட்டடம்

***399—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பொன்னமராவதி வட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான உரிய செயற்குறிப்பினைப் பெற்று, பரிசீலனை செய்து, அரசு விரைவில் முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்க அல்லும், பகலும் அயராது உழைக்கும் எங்கள் அம்மாவின் ஆட்சியில், திருமயம் தொகுதி, பொன்னமராவதி தாலுகா அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதனால் பொதுமக்களுக்கு வசதிக் குறைவாக உள்ளது. அரசு அலுவலகங்கள் அனைத்தும் படிப்படியாகச் சொந்தக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நடப்பு நிதியாண்டிலேயே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*